# கண்ணப்பன்

1477

சென்னை மேரிராணியார்
மாதர் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதரும்
'நல்லாசிரியன்' பத்திராதிபரும் ஆகிய
**கா. நமச்சிவாய முதலியார்**
எழுதியது

[illegible]

சென்னை
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
**1921**

ரெஜிஸ்தர் செய்தது] [விலை **2** அணா

PRINTED AT
THE AURORA PRESS,
MADRAS, E.

# முன்னுரை

இது பழைய கதை புதிய உரை. ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரும் அச்சம் இன்றி அகமகிழ்ந்து படிக்க அநுகூலமாகுமாறு இக் கதையுள் இடக்கரான சொற்களையும் விஷயங்களையும் ஏதும் நேராவண்ணம் எழுதியுள்ளேன். பாடசாலை மாணவர்க்கும், தமிழ் உரை நடை பயில்வார்க்கும் உபயோகமாக இதுபோன்ற சில சிறு புத்தகங்கள் வெளிவரும். இனிய பாடல்கள் இடையில் விரவி வருவது படிப்போர்க்கு இன்பம் பயப்பதாகும். இத்தகைய நூல் வரிசைகள் பல ஆங்கிலத்தில் வெளிவருவதும், அவற்றைப் படிப்போர் பெரும்பயனுறுவதும் அறிந்துள்ளோர் இதனையும் கைக்கொண்டு படித்துப் பயனுறுவர் என்பது என் நோக்கம்.

‘செந்தமிழ்வாசக வரிசை’யில் இது நான்காவது. தமிழ் பயிலும் மாணவர் ஒவ்வொன்றாக வாசித்து நலம் பெறுவாராக.

கா. நம.

# அன்பு

ஒருவன் தான் விரும்பியதோர் பொருளினிடத்துக் கொண்ட மனநெகிழ்ச்சியே அன்பு எனப்படும். இத்தகைய அன்பை [illegible] உலகத்தில் ஒன்றுமே யில்லை. [illegible] பதைக் காட்டுதற்கே,

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'

என்றார் வள்ளுவனார்.

எறும்பு முதல் [illegible] எல்லா உயிர்களும் அன்பின் வயப்பட்டவையேயாம். அன்பு என்னும் தொடர்பு ஒன்று இல்லாவிடின் வாழ்வே இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

சிற்றெறும்பு முதலியவை [illegible] ஒன்று கூடி ஒற்றுமைப்பட்டு உழைக்கின்றன. [illegible] முதலிய விலங்குகள் கூட்டங்கூட்டமாகக் கூடி மேய்கின்றன, காக்கை முதலிய பறவைகள் கலந்துண்டு வாழ்வது அன்பின் காரியமேயாகும். கொடுங் குணமும் கொலைத் தொழிலுங் கொண்டு தனித்து வசிக்குந் தன்மை வாய்ந்த வரிப்புலி முதலிய வல்லிய விலங்குகளுங் கூடத் தம் மனைவி மக்களிடத்துத் தாயினும் அன்பு காட்டி அமைந்திருக்கின்றன அன்றே.

இனி, அறிவிற்சிறந்த மானிடரும் அன்பின் வயப்பட்டவரே. மானிடர் கொண்ட அன்பு பல்வேறு வகையில் மாறுபட்டு நிற்கும். ஒருவன் பொன்னின்மேல் அன்புடையன்; ஒருவன் பூமியின்மேல் அன்புடையன்; ஒருவன் மனைவி மக்கள்மேல் அன்புடையன். இவ்வாறு மனஞ் சென்ற வழியே அன்பு செல்லும். ஆயின், இவையெல்லாம் அன்பு எனப்படுவதோ? அன்று, அன்று. மெய்யன்பு எக்காலும் நிலைபேறுடையதாக இருத்தல் வேண்டும். தன் அன்பைப் பெறும் ஒரு பொருள் அழியும் நிலைமையுடையதாயின், அதன்பாற் செல்லும் அன்பு நிலைபேறுடையதாவது எங்ஙனம்? பொன்னும் பூமியும் மனைவியும் மக்களும் ஆகிய இவை முதலிய எல்லாம் பொய்ப்பொருளாயின், அவற்றின்பாற் செல்லும் அன்பும் பொய்யன்பேயன்றோ.

இனி, மெய்யன்புதான் எது? அஃது எத்தன்மை வாய்ந்தது? எனின், அன்பு இத்தன்மையது என்று கையிற்கொண்டு காட்டத் தக்கது அன்று; அது குடத்துள் விளக்கும் கூட்டுள் வாளும்போல் உள்ளுறைவாக இருந்து ஒளிர்வது. அன்புடையாரது செய்கையைக் கண்டவிடத்து, 'இதுதான் அன்பு என்று அறியலாவதன்றி, அது கண்கூடாகக் காணத் தக்கதொன்றன்று. இனி, அச் செய்கைதானும் ஓரோவிடத்து மாறுபட்டு நிற்றலுங் கூடும். அதனைக் கண்டு, அன்பெனக்கொண்டு, மயங்குதல் கூடாதாம். அஃது என்னையெனின், மற்றையோரினும் மனைவியும் மணாளனும் ஆகிய இருவரும் மனங்கொண்ட அன்பு வன்புடைத்தென்பது மரபன்றே. அவரது அன்பை கண்டு ஆராய்வோம்; ஒருவன் இறந்து பட்டான்; அதுகண்ட அவன் மனைவியும் உடனே உயிர் விட்டாள்; அஃது அன்பின்பாற் படாதோ எனின்

படுதலுங் கூடும், படாமையுங் கூடும். படாமை எவ்வாறு கூடும் எனின், தன் துணைவன் இறந்து பட்டமை உணர்ந்து, இல்வாழ்க்கையில் நேரும் இன்னலை எண்ணி இறத்தலுங் கூடும்; 'கொண்டான் இறந்துபட்டும் கொடியாள் இவள் இன்னும் இருந்து உயிர்வாழ்கின்றாள், ஓ ஓ கொடியள்' என உலகினர் கூறும் பழிமொழியை அஞ்சிச் சாதலுங் கூடும். அன்றி, 'மணாளனோடு மரித்தாள் இம் மங்கை, இவளே கற்பிற் சிறந்த காதலி' என மாந்தர் மகிழ்ந்து கூறும் புகழை விரும்பி மரிக்கினும் மரிக்கும். மற்றும், 'கணவனோடு உயிர்துறந்த மாதர் சுவர்க்கம் புகுவர்' என்னும் நல்லுரை கேட்டிருத்தலின், அதனை யடையும் விருப்பினாலும் மரிக்கும். இன்னும் பல காரணங்களாலும் இறந்துபடும். இவற்றில் ஏதும் அன்பினால் நிகழ்ந்தது ஆகாதன்றே. மற்று மெய்யன்பு தானும் எத்தன்மையதோ எனின், தன் முயற்சி ஒரு சிறிதும் இன்றி, அவன் இறந்துபட்டவாறே அவளும் இறந்துபட்டவழி, அஃது அன்பினானே ஆயிற்றெனக் கொள்க. உடல் இரண்டும் உயிர் ஒன்றாக அமைந்த மணமக்களின் அன்பே இவ்வாறு மாறுபடுமாயின், மற்றையோர் அன்பு மாறுபடும் என்பதை வழுத்தவும் வேண்டுமோ.

இது நிற்க, மனைவி மக்களிடத்தும், மண்ணும் பொன்னும் முதலாய பொருள்களிடத்தும் ஒருவன் கொண்ட அன்பு, அவற்கு இன்பமேயன்றித் துன்பமும் பயக்கும். அவனது அன்பிற்குக் காரணமாகிய அப் பொருள் என்றும் இன்பமுற்றிருப்பின், அதன்மேல் அன்புகொண்டவனும் என்றும் இன்பமுற்றிருப்பன். அதற்கு ஒரு துன்பம் தோன்றுமாயின் தானும் அதனிற் பன்மடங்கு துன்புறுவானாவன். தன்னால் விரும்பப்பட்ட அப் பொருளுக்குத் துன்பம் ஒன்றும் நேராவண்ணம்

காக்கும் வன்மையும் அவனுக் கில்லையாம். ஆகவே அவன் தான் விரும்பிய அப்பொருளின் வயப்பட்டு, அது கொண்ட இன்ப துன்பங்களைத் தானுங் கொண்டு வருவான். வாழ்க்கையில் தான் கொண்ட துன்பமே பெரிதாம் என்பதை ஒருவனும் மறுக்கவொண்ணாது. அதனால் பொய்ப் பொருள்களிடத்துக் கொண்ட அன்பு பெரும்பாலும் துன்பத்திற்கே இடமாகும். அழியும் இயல்புடைய பொருளினிடத்து ஒருவன் கொண்ட அன்பு, அப்பொருள் அழிந்துபட்ட பின்னரும், நிலைபேறுடையதாயிருத்தலும் கூடும். கூடுமெனின் அந்த அன்பு அவற்கு எந்நாளும் இன்னலையே விளைத்து நிற்கும்; அதனால் அந்த அன்பினைப் போற்றுதலும் நீதியாகாது.

இனி, என்றும் நிலைபேறுடையதும், என்றும் இன்பமே பயப்பதும் ஆகிய அன்பு யாதென ஆராய்வோம்: நிலைபேறுடைய அன்பைச் செலுத்துதற்கும், நிலைபேறுடைய அந்த அன்பைப் பெறுதற்கும் நிலைபேறுடையதோர் பொருள் வேண்டும். உலகத்திற் காணும் எல்லாப் பொருள்களும் அழியுந் தன்மையுடையன. பிறந்தவை இறக்கும், இறந்தன பிறக்கும்; இதுவே உலகியல். அதனால் உலகத்திற் காணும் எப்பொருளும் நிலைபேறுடையது அன்று. இவற்றை யெல்லாம் ஆக்கிய இறைவன் ஒருவனே நிலைபேறுடையவன். அவன் அடிகளில் வைக்கும் அன்பே நிலைபேறுடையது.

இறைவன் திருவடிகளில் இருத்தும் அன்பே என்றும் இன்பந் தருவது. கடவுள் அடிகளிற் காட்டும் அன்பே என்றும் அழியாத கதியைக் காட்டுவது. அத்தகைய பேரன்பே இருமைக்கும் உறுதியாகிய பயனை எளிதில் ஈயவல்லது. அதனால் மெய்ப்பொருளினிடத்து வைக்கும் அன்பே மெய்யன்பு எனத் தகுவதாம்.

நல்லியல் வாய்ந்த இத்தகைய அன்பு, அதனைக் கொண்டோர் செய்கைபற்றி, முத்திறப்படுவதாம். அவை, தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்பனவாம்.

இவற்றுள் **தலையன்பாவது** இடையறாது ஓடும் ஊற்றுநீர்ப் பெருக்கிற்கு ஒப்பானது. ஊற்றுநீர் ஓரிடத்தினின்றும் வழிக்கொண்டு சுரந்து ஓடுமாயின், அதனைத் தடுத்தல் எவர்க்கும் இயலாதாம். அது தன் செயலாகப் பாய்ந்துகொண்டேயிருக்கும். இது நோக்கியே, 'விடுத்தாலும் ஊறும், இறைத்தாலும் ஊறும், இடை நடுவே, தடுத்தால் தடைபடுமோ பணைக்கேணித் தண்ணீர்' என்று கூறியதூங் காண்க. அஃதேபோல் தலையன்புடைய மெய்யடியார் தம்மை முற்றும் மறந்து, தம் மனத்தை இடையறாது இறைவனடிகளிற் செலுத்தி, எந்நாளும் எக்காலத்தும் அழிதலில்லாத இன்பத்தையே நுகர்ந்துகொண்டிருப்பர்.

இனி, **இடையன்பு** நெய்க்குச் சமமானது. நெய் அனலைக் கண்டவிடத்து உருகி நிற்கும்; அதனை அகன்றவிடத்து இறுகி நிற்கும். அதுபோல், இடையன்புடையார் இறைவன் எழுந்தருளியுள்ள ஆலயங்களையேனும், அவ்விறைவற்குத் தொண்டு பூண்டொழுகும் அடியாரையேனும் எதிருறக் கண்ட காலத்துத் துணுக்குற்று உடல் நடுங்கக் கண்ணீர் வார மயிர்க்குச்செறிய நாத் தழுதழுப்ப அன்புகாட்டி வணங்கி நிற்பர்; அவற்றை அகன்றகாலத்தே ஒருவாறு மறந்து வாழ்க்கை வயப்பட்டு மயங்கியிருப்பர்.

இனி, **கடையன்பு** இதுவெனக் காட்டுவோம். கடையன்பாவது அரக்கின் தன்மை அமையப்பெற்றதாகும். அரக்கு நெருப்பிற் காட்டுந்தோறும் ஒருவாறு உருகும், அதனை அகன்றவுடன் இடையீடின்றி இறுகிவிடும்.

அதுபோல் கடையன்புடையார் கடவுளையும் அவனது அடியாரையுங் காணுந்தோறும் சிறிது கனிவடைந்து, உடனே அவ்விறைவனிடத்தும் அவன் அடியாரிடத்தும் ஐயங்கொண்டு அன்பு நீங்கி வன்பு கொள்ளுவர். இத்தகையார் நாத்திகரினும் நலங்கெட்டவரே யாவர். நாத்திகர் இறைவன் ஒருவன் இல்லையே என்பர். கடையன்புடையாரோ அவர்பால் ஐயங்கொண்டு அல்லலுற்று அழிந்துபடுவர்.

இம் மூவகைப்பட்ட அன்பில் நந்தம் கண்ணப்ப நாயனார் கொண்ட அன்பு எத்தகையது என்று ஆராய்வோம்: கண்ணப்ப நாயனார், 'கொல்லாமை அறியாமை குணமாகக் கொண்டொழுகும், பொல்லாத சிலைவேடப் புளினர்' குலத்திற் பிறந்தவர். இவர் காளத்தி மலையின்கண் கடவுளுருவைக் கண்டதும் அன்பின் வயப்பட்டு, பெற்றோர் முதலிய அனைவரையும் மறந்தனர். மற்றும் அக் கடவுளைத் தம் அன்பு காரணமாக ஊன் உண்ணவும் செய்வித்தனர். ஆறு நாட்களில் அப் புனிதர் அன்பே உருவாக மாறி, பெருமானுக்கு உற்றனவாகத் தோன்றிய இடுக்கண்களைத் தமவாகக் கொண்டு உறுப்பிற் சிறந்த கண்ணையும் இடந்து அவற்கு அப்பினர். அதனால், திண்ணப்பராகிய கண்ணப்பர் கொண்ட அன்பு மெய்யன்பே என்பது திண்ணமாகின்றது.

இனி, அன்பே உருவமாகி, அழுது அழுது, தொழுது தொழுது, அரனடிக்கே அன்பு பூண்ட மணிவாசகப் பெருமான் கண்ணப்பரது உடல் முழுதும் அன்பே; குணம் குணி என்னும் பேதம் அவரிற் காண்டல் இல்லை என்னுங் கருத்தால்,

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி


வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ'

எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

பின்னர், இவ்வுலகை ஒரு துரும்பாக மதித்த பெருந் துறவியாகிய பட்டினத்தடிகளார் தந்தம் கண்ணப்பரது அன்பை வியந்து,

'வாளான் மகவரிந் தூட்டவல்லேனல்லன் மாதுசொன்ன
சூளான் இளமை துறக்கவல்லேனல்லன் தொண்டுசெய்து
நாளாறிற் கண்ணிடந் தப்பவல்லேனல்லன் நானினிச்சென்
றாளாவ தெப்படியோ திருக்காளத்தி யப்பருக்கே'

என்று கூறியருளினர். அத்தகைய மெய்யன்பரது சரித்திரத்தை யினிக் கூறுவோம்.



ஸ்ரீ காளத்தி.

# கண்ணப்பன்

சிறப்பும் இணையுமற்ற உடுப்பூர் என்னும் திருப்பதி பண்டைக் காலத்தில் பொத்தப்பி நாட்டின்கண் புகழ் பெற்று விளங்கியிருந்தது. அப் பதியைத் தன் அரசிருக்கையாகக் கொண்டு, வேடுவர்க்குள் வேந்தனாக விளங்கிய நாகன் என்பான், நல்லரசு புரிந்து வந்தனன். அவ் வேந்தன் உரிய பருவத்தே தத்தைபோலும் மொழியினை யுடைய தத்தை யென்பாளை மணந்து, அவளொடு, மலரும் மணமும்போல், ஒருமைப்பட்டு இல்லறம் நடத்தி இனிது வாழ்ந்திருந்தனன்.

இவ்வாறு நாள் பல செல்ல, ஒரு நாள், நாகன் தன் மனத்திற் கினிய மனைக் கிழத்தியை நோக்கி, 'பெண் மணி, இறைவன் இன்னருளால் செல்வம் அனைத்தும் சிறக்கப் பெற்று, அன்புறும் வாழ்க்கை அடைந்துள்ளோம். நமது சிந்தை களிக்கச் செல்வன் ஒருவனைப் பெறாதபோது, இச் செல்வம் அனைத்தும் பெற்றதனாற் பயன் யாது! "தம் பொருளென்ப தம் மக்கள்" என்பர் பெரியோர். மக்களில்லாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கை யாமோ!

"கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி யில்லா சாட்சியம் அருளில்
திண்ணென் நெஞ்சமும் புலவரில் அவையுமொண் டிமபால்
வண்ண வாயின மக்களில் வாழ்வும் ஒப்பாமால்"

எனவும்,

"அரிகொள் பொன்புனை கிண்கிணித் தண்டையோ டணிந்த
தருண மென்றளிர்ச் சீறடிச் தளர்நடைச் சிறுவர்
மருவ முதசெய் வாம்பல்வாய் மழலையா ரமுதம்
பருகிலாச் செவி பாவையின் செவியெனப் படுமால்"

எனவும் கற்றுவல்ல கவிஞர் கூறுகின்றனரே! மற்றும் நன்மக்கட் பேற்றை யெய்தா தொழிந்த மாந்தர் புத்தென்னும் நரகத்தை அடைவரென உண்மை நூல்கள் உரைக்கின்றன. அந்தோ, மக்கட்பேற்றை யெய்தாதவர் இம்மைப் பயனையே யன்றி மறுமைப் பயனையும் இழந்தவராகின்றனரே! இக்கதிக்கு நாமும் இலக்காயினோ மன்றோ!' என்று கூறி, இன்னலுறுவாளாயினள்.

அது கண்ட தத்தை, 'என் இன்னுயிர்த் தலைவ, இதன் பொருட்டு நாம் செய்யத் தக்கது யாது? யாவும் இறைவன் திருவருளின்படி நடக்கும்: அவனன்றி ஓர் அணுவும் அசையா தன்றோ: நம் குலதெய்வமாக விளங்கும் குமாரநாயகனை வணங்கி வரங்கேட்போம்: அப்பெருமான் திருவருள் பாலிக்குமேல் எல்லாம் இனிது முடியும்' என்றனள். தன் நாயகியின் நல்லுரை கேட்ட நாகன் மகிழ்ச்சியடைந்து, நன்னாள் கொண்டு, தன் சுற்றத்தார் முதலாயினோர் சூழ்ந்து வரச் சென்று, செவ்வேள் தங்கிய திருத்தளியை யடைந்து, ஆலயத்தை அலகிட்டு மெழுகி, பசிய தோரணங்கள் தொங்கவிட்டு, நறிய கடப்பமலர் மாலைகள் நாலவிட்டு, சேவலும் மயிலுந் திரள் திரளாகச் சுற்றி விட்டு, திருவிழா இயற்றி, தேவராட்டி-

யைக் கொண்டு வெறியாட்டி வியாவித்து, மாமேறியவனைக் குறித்துக் கொண்டாட்டத்து, அப்பொருளைத் தலைவருக்குப் பெற்று, தன் இருக்கையை அடைந்தான்.

சில நாட்களின்பின் முருகப் பெருமானது திருவருளால், தத்தை என்பாள் வயிறு வாய்த்து, ஒப்பரிய நாளில் ஓர் ஆண்மகவை ஈன்றனள். நாகன் அதுகேட்டுப் பெருமகிழ்வடைந்து, வற்றாத செல்வமும் அன்னமும் பொன்னும் அணிகலனும் வழங்கி, சிறப்புகள் பலவும் சீர் பெறச் செய்து, தன் குலப்பெரியோர் வழக்கப்படியே பேரிட்டு, ஆண்டுதோறும் பாராட்டி வளர்த்து, அவ்வளவில் திண்மையான நிறத்தை உடைத்தாயிருந்த அவனுக்குத் திண்ணன் என்று பெயரிட்டனன். பின்பு, திண்ணனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, தம் பெற்றோருக்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்து, சிறுதேர் உருட்டியும், சிறுபறை கொட்டியும் ஆடல் புரிந்து வருவானாயினான். இங்ஙனம் நாள் பல செல்ல, திண்ணன் பிள்ளைப் பருவம் கடந்து, தம்மையொத்த சிறுவரோடு சேர்ந்து, தம் குடிச்சேரியை விடுத்து வனங்களிற் புகுந்து, மான் முயல் புலி முதலிய விலங்குகளின் குட்டிகளைத் தொடர்ந்து ஓடி, அவற்றைப் பிடித்துக் கொணர்ந்து, தம் வீடுகளிற் கட்டி வைத்து, அவற்றோடு விளையாடுவாராயினர்.

பின்பு, நாகன் தன் புதல்வனுக்குப் படைக்கலப் பயிற்சி செய்விக்க விரும்பி, தம் பழங்குடிச் சுற்றத்தாரையும் அழைத்து, ஒரு நல்லநாள் கண்டு, அக்கணத் தன் சுற்றத்தாருக்கும் சிறப்புகள் பலவும் செய்வித்தான். தம் அரசனது அழைப்பினால் வில்லாளர் ஒருங்கே வந்து கூடி, வில்லெடுத்து ஊரெங்கும் விளம்பரஞ் செய்தனர். அதுகேட்ட

வேடுவர் அனைவரும் சிந்தை மகிழ்ந்து தத்தம் வீடுகளை அணிபெற அலங்கரித்து விளங்கச் செய்தனர்.

நாகன் விடுத்த நற்செய்தியை யுணர்ந்த அரசர்கள் அகிலும், மணியும், ஆனைமருப்பும் முதலாயுள்ள மலைபடு பொருள்களைத் திரட்டிக்கொண்டு திரளாக வந்து உடுப்பூரை யடுத்த வனங்களில் வதிந்திருந்தனர். சுற்றத்தார் முதலிய மற்றையோர் தேனும், தினைமாவும், பலவகைப்பட்ட பழங்களும், கிழங்குகளும் சேகரித்துக் கொண்டுவந்து கூட்டமாக நிறைத்தனர்.

விழுந்த பொருளைக் குனிந்தெடுக்கவும் இடமின்றி நெருங்கியிருந்த விருந்ினரைக் கண்ட நாகன் பெரு மகிழ்வடைந்து வில்விழா இயற்றத் தொடங்கினன். ஏவலாளர் அத் திருவிழாவிற்கு வேண்டிய பொருள்கள் அனைத்தும் அமைத்துக் கொண்டனர். வீரர்கள் தம் படைகளைக் கையிற்கொண்டு அருகில் சூழ்ந்து நிற்க, வில்லாசிரியர் உத்தம லக்ஷணம் விளங்கிய ஒரு வில்லுக்குக் காப்புக் கட்டிய பின்னர்த் திண்ணனார் கைக்கும் கங்கணங் கட்டினர். வேடுவர் தம்மை இலைகளாலும் பலிகளாலும் சவழிக் கலன்களாலும் புனைந்து கொண்டு வந்து, ஆசிரியரை அடுத்து நின்றனர். பின்பு அனைவரும் ஒருங்கு திரண்டு, தொண்டகம், முரசம், துடி முதலாயுள்ள இன்னியங்கள் முழங்க அவ் வுடுப்பூரை வலமாகச் சுற்றி வந்தனர்.

பின்னர் அவரவர் தாம் தாம் விரும்பியவாறு உணவருந்தினர். தேனும் தினைமாவுங் கலந்துண்டார் சிலர்; ஊனைத் தேனில் தோய்த்து வதக்கி யுண்டார் சிலர்; விளாங்கனியில் தேனைப்பெய்து பிசைந்துண்டார் சிலர்; சிலர் மதுவே கொண்டனர்; சிலர் பாற்சோறே மகிழ்ந்து உண்டனர். இவ்வாறெல்லாம் உண்டபின்னர்ப் பொழுது

சாய்தல் கண்டு கள்ளுண்டு களிப்புற்று ஆர்த்தனர். ஆடினார் சிலர், பாடினார் சிலர், மது மயக்கத்தால் மதி மிழந்து வீழ்ந்தார் பலர். இவ்வாறெல்லாம் ஆரவாரங்கள் அடங்கின. மறுநாள் மற்றை நாட்களிலும் பதின் மடங்கு மாண்புற்று விளங்கச் சிறப்புகள் பல செய்து, உச்சி வேளையில் பலவகைப்பட்ட மங்கல வாத்தியங்கள் முழங்க மலைச்சாரலிற் சென்று வனதேவதைக்குப் பலி யிட்டுப் பூசைமுடித்தனர். ஆசிரியர் வாழ்த்துக்கூறி வில்லைத் திண்ணனார் கையிற் கொடுத்தனர். திண்ணனார் அதனைப் பணிவுடன் ஏற்று, ஆசிரியரை முறைப்படி வணங்கி, அவர் கற்பித்தவாறே பயின்று பழகலாயினர். ஓதாது உணரும் உத்தமர் என்றே போலத் திண்ணனார் ஆயுதப் பிரயோகங்களை அதி விரைவில் உணர்ந்தனர். பின்பு, அத்திண்ணனார் வளர்பிறைச் சந்திரனை போல் வளர்ந்து பதினாறாம் பிராயத்தை அடைந்தனர்.

தன் புதல்வனது வன்மையையும் வீரத்தையும் கண்டு மகிழ்ந்த நாகன், அவர்க்கு இளவரசுப் பட்டஞ் சூட்ட விரும்பி, தன் காட்டிலுள்ள வேடர் தலைவரை வர-வழைத்து, 'ஐயன்மீர், இது காறும் எங்கட்குத் தலைமை பூண்டு, நம்மையாட்கொண்ட முருகக்கடவுளது பேர-ருளினால், உங்களைக் காத்து வந்தேன் : இப்பொழுது எனக்கு முதுமைப்பருவம் முதிர்ந்து விட்டது ; இனி நாட்டையாளவும், காட்டை யடையவும், வேட்டையாடவும் வலியில்லேன். இனி, எனது அருந்தவப் புதல்வனாகிய திண்ணனை நுமக்குத் தலைவனாகக் கொண்டு, என்னி-டங் காட்டிய பேரன்பை அவனிடங் காட்டி இன்புற்று இனிது வாழ்வீராக' என்று கூறினன். தம் தலைவன் கூறிய இன்மொழியைக் கேட்டு மனங்களித்த வேடுவர், 'அரசே, அவ்வாறே யாங்களும் எமது சந்ததியாரும்

செய்யச் சித்தமாக இருக்கின்றோம்' என்றனர். எனினும், நாகன் தன் துயரினை வரையறுத்து, தன் விருப்பமனைத்தும் விளங்கவுரைத்து, 'திண்ண, நீ கன்னி வேட்டஞ் செய்யக் கானகஞ் செல்லவேண்டும். ஆதலின், அதற்குத் தக்கவாறு ஆடையணிகள் அணிந்து வருக' எனக்கூறி, தான் கொண்டிருந்த தோலையும் வாளையும் உதவினன். திண்ணனார் தந்தையை வணங்கி, தோலையும் வாளையும் பணிவுடன் ஏற்றுச்சென்று, தம் இருக்கையை அடைந்து, வேட்டைமேற் செல்ல நாட்டமுற்று இருந்தனர்.

பின்பு, நாகன் தேவராட்டியை வருவித்து, 'அம்மே, என் அருந்தவப் புதல்வன் கன்னி வேட்டஞ் செய்யக் கானகஞ் செல்கின்றான். அவனுக்கு வெற்றி யுண்டாகுமா வனதேவதைகளுக்குப் பலியிட்டு வருக' என்றான். அவளும், 'அரசே, இன்று யான் புறப்படுகையில் உத்தம சகுனங்களே உண்டாயின; உமது மைந்தனுக்கு நல்லன வெல்லாங் கைகூடும்' என்று உவப்புடன் உரைத்த பின்னர், பலிக்கு வேண்டிய பண்டங்களை அமைத்துக் கொண்டு வனத்திற்குச் சென்றாள்.

அரசுரிமை மேற்கொண்ட திண்ணனார் படைகள் புடைசூழ வேட்டைக்குப் புறப்பட்டு, காட்டையடைந்து, ஆண்டுத் தம் எதிர்ப்பட்ட விலங்குகள் அனைத்தையும் வேட்டையாடி வதைத்தனர். அப்போது, ஒரு பன்றி, வேடுவர் கட்டிய வலையைச் சிதைத்துக்கொண்டு விரைந்து ஓடுதலும், திண்ணனார் அப்பன்றியைப் பின்பற்றிப்போய், அது செல்லும் வழியெல்லாம் சென்று துரத்தினர். முடிவில் அப்பன்றி களைப்புற்று, ஒரு மரத்தின் நிழலில் அசைவற்று நின்றுவிட்டது. திண்ணனார் உடனே அதனைத் தம் உடைவாளாற் குத்திக் கொன்றனர். நாணன், காடன் என்னும் வேடுவர் இருவர் தம் தலைவரைத்

தொடர்ந்து ஓடிவந்து, அப்பன்றி குத்துண்டு இறந்து-பட்டிருப்பதைக்கண்டு, மிக வியந்தனர். பின்பு நாணன் 'அண்ணலே, இன்று நெடுநேரம் வேட்டையாடி வாட்ட-முற்றீர்; இப்பன்றியும் நமக்குச் சாலவருத்தத்தை யுண்-டாக்கிற்று. ஆதலின், இதனைச் சுட்டே வதக்கியுண்டு, தண்ணீர் அருந்தி, சற்றே இளைப்பாறி அப்பாற் செல்-வோம்' என்றான். திண்ணனார், 'அங்ஙனமே செய்வோம்; ஈண்டு நீர்நிலை யொன்றுங் காணேமே' என, காடன், 'அரசே! அதோ தெரிகின்ற தேக்கமரத்திற்கு அப்-பால் பொன்முகரியாறு புனல் நிறைந்து பாய்கின்றது' என்றான். 'ஆயின், அங்கே சென்று தங்கி வருவோம்' என்றனர் திண்ணனார். உடனே வேடுவர் இருவரும் இறந்துபட்ட அப்பன்றியை எடுத்துக்கொண்டு செல்-லும்போது, திண்ணனார் தமக்கு முன்னே தோன்றும் மலையைக் கண்டு, 'நாண, நாம் அம்மலைமேற் சென்று வருவோம்' என, நாணன், 'ஆம், சென்றால் அங்கே கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள குடுமித்தேவரையுங் கும்பிடலாம்' என்றான்.

அதுகேட்டு, திண்ணனார் விரைந்து நடந்து, பொன்-முகரியாற்றை யடைந்து, காடனை நோக்கி, 'காட, நீ ஈண்டே தங்கித் தீக்கடைகோல் கொண்டு தீயுண்டாக்கி, இப்பன்றியைத் தீயிற் பக்குவஞ்செய்து வை. யாங்கள் இம்மலைமேற் சென்று, வணங்கிக் கண்டு வருகின்றேம்' என்று கூறி, நாணனை அழைத்துக்கொண்டு சென்றனர். நடையில் திண்ணனார் நாணனை நோக்கி, 'நாண, இம்-மலையை அணுக அணுக எனக்கோர் அன்பு தோன்றுகின்றது. தலையில் தாங்கிய சுமையைக் கரையில் இறக்கினாற்போல், உடற்பொறை நீங்குகின்றது. இஃது என்னென்று அறியேன்! சென்று சேவிக்க வேண்டும் என்னும் விருப்பினால் என்

சிக்காத விதமாகத் தாங்கின்றது' எனக் கூறிக்கொண்டே அம்மலையின் உச்சியை அடைந்தனர். அடைந்தவர் உள்ளம் ஆநந்தக்கடலாய், ஆங்கு, ஒரு சிவலிங்கம் இருத்தல் கண்டு, பற்றினைத் துறந்து விரைந்து, அன்பே ஓர் உருவமாகி நிலைத்து நின்றனர். பின்பு, அவர் ஆசை மேலிட்டால், ஆவினைக் கண்ட இளங்கன்றை ஒப்ப, சிவலிங்கப் பெருமானைத் தம் ஆர்வமுறத் தழுவிப் பற்றிக்கொண்டு முத்தமிட்டு மனமுருகி நின்றனர். பின்னும் திண்ணனார் அப்பெருமானை உற்று நோக்கி உள்ளம் பூரித்து, உடல் முழுதும் மயிர்க்கூச்செறிய, கண்களில் நீர்வார, நாக்குழற நின்று, 'எம்பெருமானே, யானையும் புலியும் கரடியும் என்னும் இவை திரியும் இம்மலையின்மேல் உற்ற துணை ஒருவரும் இன்றி, தனித்திருத்தல் தகுமோ ஐயா! இனி, அடியேன் தேவரீரை விட்டுக் கணமும் பிரியேன், பிரியின் உயிர் தரியேன். எந்தாய், தனி ஒன்றியாக இருப்பின், உமக்கு உணவு கொடுத்து உபசரிப்பார் யாவர்? பசிதீர்க்கும் நீர் பசியோடிருத்தல் பான்மையன்றோ? என்றென்றும் யானும், உமக்குத் தேவையாம் தீனியாவும் தீங்கனிகளும் பல்வகைப்பட்ட இறைச்சிகளும் காலந்தவறாது படைக்கின்றேன். எனையும் நீங்காது நின்று காவல் புரிவேன். இன்னே எழுந்தருளும் என்றார்.

'சாமிநீ தனியே யீண்டுத் தங்குதல் தரித்த லாற்றேன்
எமதுநல் லுடுப்பூர்க் கின்னே என்னொடு வருதல் வேண்டும்
நீமனம் மிரங்காய் எந்தாய் எனப்பல நிகழ்த்தி னானைக்
கார்மழை யனையா னன்புக் கடலினுக் கெல்லை யுண்டோ.'

என்று, திண்ணனார் எவ்வளவு வேண்டியும் பெருமான் எதும் பேசினாரல்லர். அது கண்டு, திண்ணனார், நம் பெருமானுக்கு இவ்விடத்திருத்தலே எண்ணம்போலும்; இனி என் செய்வோம்! விட்டுப் பிரிதலும் ஆகாதே'

என்று எண்ணித் திகைத்து நின்று, மெய்ம்மறந்து, தம் கையிற்கொண்ட வில்லும் அம்பும் நழுவியதையும் உண-ராராகிப், பரவசமடைந்தனர். பின்பு அவர் ஒருவாறு தெளிவடைந்து, பெருமானது திருமுடிமேல் பச்சிலையும் மலரும் பரப்பியிருத்தலைக் கண்டு வியப்புக் கொண்டு, 'என்னே! இவர்க்கு இலையும் மலரும் இட்டார் யாவர்! நீருஞ் சிறிது சிந்தியிருக்கிறதே!' என்று ஐயுற்று வினவ, நாணன், 'ஐயா, முன்னொருநாள் நான் உமது தந்தை நாக-ரோடு வேட்டஞ் செய்ய இங்கு வந்ததுண்டு. அப்போது, ஐயர் ஒருவர் இப்பெருமானை மஞ்சனமாட்டி, மலர் சூட்டி, இன்னமுதூட்டிச் சென்றதைக் கண்டேன். அந்த ஐயரே இன்றும் செய்திருப்பார் என எண்ணுகின்றேன்' என்றான். அதனை யுணர்ந்த திண்ணனார் இவையெல்லாம் பெருமானுக்கு விருப்பம் போலும்; நாமும் அவ்வாறே செய்வோம்' என்று தம்முள் உறுதிகொண்டு, அவ்வாறு-யின் இப்போது நன்பகலாயிற்றே! பொழுதும் உச்சி-யில் வந்துவிட்டதே! எம்பெருமான் எதுவும் உணவின்றிப் பசியோடு இருக்கின்றனரே! என்செய்வது! பெருமானைத் தனியே விட்டுச் செல்லுதலும் அரிதாகின்றதே! செல்லா-விடின் இவர் உணவின்றி வருந்துவரே!' எனப் பலவாறு எண்ணி, வில்லைக் கையிற்கொண்டு,

'போதுவார் மீண்டு செல்வர் புல்லுவர் மீளப் போவர்
காதலின் நோக்கி நிற்பார் கன்றகல் புனிற்றுப் போல்வார்
நாதனே யமுது செய்ய நல்லமெல் லிறைச்சி நானே
கோதறத் தெரிந்து வேறு கொண்டிங்கு வருவே னென்பார்'

'உழுந்துருள் பொழுதின் மீள்வேன் ஒருகணை மேனுந் தாழேன்
வழங்குறு கொடுவி லங்கு வருமென அஞ்சே லைய
எழுந்துமேல் வந்த தாயின் என்னையா யெனக்கூ வென்று
குழைந்தவிற் றடக்கை கூப்பிக் குறவர்கோ னரிதி னீங்கிச்'

சென்றனர். சென்றவர், நாணன் பின்னேவர, மலையினின்றிழிந்து, பொன்முகரி யாற்றைக் கடந்து, அதன் கரையையடுத்த சோலையிற் புகுந்தனர். அப்போது காடன் ஓடி வந்து திண்ணனை வணங்கி, 'அரசே, அப்பன்றியைத் தீயிற் செய்வன செய்து சித்தமாக வைத்துள்ளேன், வந்து வதக்கியருள்க' என்றான். திண்ணனார் ஒன்றுங் கூறாது, எண்ணமெல்லாம் ஈசனிடத்தே வைத்தவராய், பன்றியினிறைச்சியைக் கோலிற் கோத்து, தீயிற் காட்டிப் பதமுற வதக்குவாராயினர். அப்போது நாணன் காடனை நோக்கி, 'காட, நாம் இனி இவரை எதிர்பார்த்துப் பயனில்லை; மலைமேற் சென்று குடுமித்தேவரைக் கும்பிட்டதும் அவருக்குக் குணம் மாறிவிட்டது; அதனால் நம் குலத்தொழிலனைத்தும் கைவிட்டனர். அத்தேவருக்கு இறைச்சி கொண்டுபோகவே இங்கு வந்தனர்' என்றான். அதுகேட்ட காடன் திண்ணனை நோக்கி, 'ஐய, என்ன இது, பித்துக்கொண்டு பேதுறுகின்றீரோ! இவ்வாறும் செய்வாருண்டோ!' எனப் பலவாறு கூறி வேண்டினன். திண்ணனார் அக்காடனைக் கண்ணெடுத்தும் பாராராகி, இறைச்சித் துண்டுகளைக் கோலிற் கோத்துப் பதமுற வதக்கி, பல்லினால் அதுக்கி, நறுஞ்சுவையுள்ள துண்டுகளை யெடுத்து, தேக்கிலையிற் றைத்த கல்லையில் வைத்து, என்பு முதலிய மற்றையவற்றை எறிவாராயினர். அது கண்ட வேடுவர் இருவரும், நாம் இனி இங்கிருந்து பயனில்லை. பித்தம் தலைக்கேறிவிட்டது போலும்; இன்றேல் பசியோடு இருப்பவர் பதம் பார்த்துப் பார்த்து, மாமிசத்தை வைத்துவிடுவரோ! இவரைத் திருப்ப இனி நம்மால் ஆகாது; நாம் சென்று நம் அரசர்க்கு அறிவித்து, தேவராட்டியை அழைத்துக் கொண்டுவந்து, இம்மயக்கத்தைத் தீர்த்தல் வேண்டும்' எனத் தீர்மானித்து, தம்முடன் போந்த ஏவலாளரை அழைத்துக்கொண்டு தம் நாட்டை அடைந்தனர்.

திண்ணனார், தம்முடன் வந்த வேடர்கள் தம்மை யகன்றனர் என்பதையும் உணராராகித் தம் கருத்திலேயே கண்ணுறுங் கருத்தாராக இருந்து, வேண்டிய மட்டும் இறைச்சிகளைச் சேகரித்துக் கொண்டனர். பின்னும் தம் பெருமானுக்கு வேண்டுவன யாவையென் றெண்ணி, 'நீராட்ட நறும்புனல் வேண்டும்' எனத் தேர்ந்து, ஆற்றில் இறங்கிச் சிறிது நீரை வாயில் முகந்து கொண்டு, பொழிலிற் புகுந்து அன்றலர்ந்த மலர்களிற் சிலவற்றைப் பறித்துத் தலையில் செருகிக்கொண்டு, ஒரு கரத்தில் இறைச்சியையும், மற்றொரு கரத்தில் வில்லையும் தாங்கிக்கொண்டு விரைந்து செல்வாராயினர். செல்லுகையில், 'அந்தோ, இந்நேரம் நம்பெருமான் பசியோடிருந்து பரிதபிப்பரே! தனியே யிருந்து தவிப்பரே!' என்று எண்ணிப் பதைபதைத்து, காற்றும் பின்னிடக் கடுகி நடந்து, ஆலயத்தை யடைந்து, சிவலிங்கப் பெருமானது திருமுடியிலிருந்த மலர்களைத் தம் செருப்புக் காலால் மாற்றி, வாயிலிருந்த நீரால் மஞ்சனமாட்டி, தம் தலையிற் செருகியிருந்த மலர்களை எடுத்து, பெருமானது உச்சியிற் சாத்தி உள்ளங் குளிர்ந்து, ஊனுணவை யூட்டுவாராயினர். 'எந்தாய், இவ் விறைச்சி மிக்க இனிமை யானது; நானே பதம்பார்த்துப் பக்குவஞ்செய்து கொண்டுவந்துள்ளேன்; உண்ண உண்ண உருசியா யிருக்கும்' எனப் பலவாறு கூறி, அவ் விறைச்சியைத் தம் அன்புடனே கூட்டி உண்பித்தனர். பொழுது பட்டதும், திண்ணனார், விலங்குகளைத்தும் விலகி நிற்குமாறு, தம் வில்லைக் கையிற்கொண்டு, பெருமானுக்கு அருகில் நின்று, கண்ணுறங்காது காவல் செய்வாராயினர். மறுநாள் பொழுது புலர்தலும், திண்ணனார், உணவுகொண்டு வருவதற்குப் புறப்பட்டு வேட்டை மேற் சென்றனர்.

இஃது இங்ஙனமாக, காளத்தியப்பரைக் கனவிலும் மறவாதிருந்து, காலந்தோறும் வந்து, அருச்சிப்பவராகிய சிவகோசரியார் என்னும் அந்தணர் அன்று வைகறையில் எழுந்து, பொன்முகரியாற்றில் நீராடி, தீர்த்தமும் பத்திரமும் புஷ்பமும் கொண்டு, ஆலயத்தை யடைந்தனர். ஆண்டு, இறைச்சியும் எலும்பும் இறைந்து கிடக்கக் கண்டு திடுக்கிட்டு, நடுநடுங்கி, குதித்துச் சென்று, பெருமானருகில் நின்று, 'எந்தாய்! இத்தகைய கொடுந்தொழில் புரிந்தார் யாவரோ! அவர்கள் இவ்வாறு செய்தற்குத் தேவரீர் திருவுள்ளம் இசைந்ததோ!

'கொல்லாமை யறியாமை குணமாகக் கொண்டொழுகும்
பொல்லாத சிலவேடப் புளிஞரோ யிதுசெய்வார்
ஒல்லாத செயலிதனைப் புரிந்தோர்கள் கண்டக்கால்
நில்லாமல் இறந்திடுவார் நிற்கின்றேன் கொடுவினையேன்'

என்று வருந்தி, வாய்விட்டு அரற்றி, ஒருவாறு தேறி, அங்கு இறைந்து கிடந்த எலும்பு முதலிய மலினங்களை திருவலகுங் கொண்டு நீக்கிச் சம்ப்ரோக்ஷணஞ் செய்தனர். பின்னர் அப்பெரியார் ஆற்றையடைந்து நீராடி ஆலயத்தை யடைந்து பெருமானுக்கு அபிஷேகஞ் செய்து, பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, திருமுன் நின்று, இருகரங்களையும் சிரசின்மேற் குவித்து, அழவிற்பட்ட பெருமூசென உள்ளம் உருக, கண்களில் நீர் வார, மெய் சிலிர்ப்ப, காக்கும்போறத் துதித்து, அரிதின் நீங்கித் தம் அகத்தை யடைந்தனர்.

ஊன் கொண்டுவரச் சென்ற திண்ணனார், காட்டிற் புகுந்து வேட்டையாடி, மான், மரை, முயல் முதலியவற்றை எய்து கொன்று, அவற்றின் உடலங்களைக் கீறி, நறுஞ்சுவையுள்ள இறைச்சிகளை நாடியெடுத்து, தீயிற் காட்டி வதக்கிச் சேர்த்து, கல்லையில் வைத்து, அதில்

கோற்றேன் பெய்து ஊறவைத்து, முன்னாள் செய்ததே-
போல் நீரும் மலரும் கொண்டு, விரைந்து நடந்து, ஆல-
யத்தை யடைந்து, நீராட்டி, மலர் சூட்டி, இறைச்சியை
ஊட்டும் பொழுது, 'எந்தாய், இவ்விறைச்சிகள் நேற்று
உண்டவற்றினும் இனிமையானவை; மிகவும் மென்மை
யானவை; பற்பல உறுப்புக்களைப் பதமுற வதக்கி,
நறுந்தேன் பெய்து நலமுறப் பொரித்தேன். தின்னத்
தின்னத் தெவிட்டாது' எனப் பலவாறு உபசரித்து
உண்பித்தனர். பின்னர் அருகில் விலங்குகள் நெருங்கா-
வண்ணம் பகலும் இரவும் விழித்திருந்து, பெருமானை
விட்டுச் சற்றும் அகலாது காத்திருந்தனர்.

சிவகோசரியார் மறுநாளும் வந்து, சிந்திக்கிடக்கும்
இறைச்சி முதலியவற்றைக் கண்டு, வெருவி அயர்ந்து,
திருத்தளியைச் சுத்தஞ் செய்து, பெருமானை அருச்சித்-
துத் துதித்து அகல்வாராயினர். இவ்வாறு சில நாட்-
கள் செல்லவும், ஒருநாள் சிவகோசரியார் ஆலயத்தை
யடைய, அன்றும் எலும்புகள் சிந்திக்கிடக்கக் கண்டு,
சிந்தைகனன்று, 'எந்தை, நாடோறும் இவ்வாறு செய்பவர்
யாவர்! இக் கொடுந்தொழில் கண்டும் பொறுமையுடன்
வாளா இருக்கின்றனையே! என் செய்கோ, எம்பெருமானே!
உமது திருவுள்ளம் இத்தீச்செய்கைக்கும் உடன்பட்டு
இருக்கின்றது போலும்! இதனைக் கண்டும் என் உயிர்
உடலில் தங்கியிருத்தல் தகுதியோ! இன்றே உயிர் விடு-
கின்றேன்' எனப் பலவாறு கூறிப் பதைபதைத்து,
ஒருவாறு துணிந்து, ஆலயத்தைச் சுத்தஞ் செய்து,
முறைப்படி அருச்சித்து, கூப்பிய கையினராய் நின்று,
தோத்திரம் செய்தபின், 'எல்லாம் வல்ல இறையே,
இன்னும் இத் தீங்கு நிகழாவண்ணம் கடைக்கணித்து

அருளல்வேண்டும்' என்று வேண்டிக்கொண்டு, தம் இருக்கையை அடைந்தனர்.

அந்தணர் அகமெலிந்து சென்றதை யுணர்ந்த பெருமான், அன்று இரவு சிவகோசரியார் கனவில்தோன்றி, 'அன்பனே, வருந்தாதே, ஆலயத்தில் அடாதன செய்வோன் வேடன் என்று எண்ணாதே, அவன் அன்பே உருவுகொண்ட அடியவன்.

'அதுநமக் கிடுவோன் செய்தி அறைகுதும் அம்ம தெய்வ
நதிபல படிந்து தோற்றும் நவையில்தா னங்கள் செய்தும்
விதிப்புறங் கண்டு பெற்ற மெய்வழின் மகன்மேல்தாய்க்குப்
புதியஅன் பெனைத்தனைத்தப் புண்ணியற் கெம்மேலன்பு.

மற்றவன் செருப்புக் காலான் மணங்கமழ் நமது சென்னி
உற்றபூ மாற்றுங் காலத் துடம்பெலா மயிர்பொ டிப்ப
சிற்றின மகன்பூங் கையாற் றிருமுகம் வருடப் பட்ட
பெற்றதா பென்ன நெஞ்சம் பெரிதுரு குதுமா லன்ப.

அவன் மனம் நமக்குக் கோயில் அவனுரை பலவும் வேதம்
அவன்முயல் தொழில்க ளெல்லாம் அறத்தொழில் ஐயமில்லை
அவனியல் காட்டு கின்றோம் அன்பநீ நாளை யேவந்
தவனறி யாத வண்ணம் அயலொளித் திருத்தி' என்றார்.

சிவகோசரியார் திடுக்கிட்டுத் துயிலுணர்ந்து, பெருமான் அருளிய அமுதவாக்கை உன்னியுன்னி, 'என்னே திருவருள் இருந்தவாறு! இரக்கம் என்பதை எள்ளளவும் உணராத வேடவர்க்கும் அன்பு தோன்றுமோ! அன்பென்றால் ஈதன்றோ அன்பு. அவ் வேடவர் கொண்ட அன்பும், அவர் பெற்ற அருளும் எவர் பெற்றார், எவர் பெறுவார்! உயர் குலத்திற் பிறந்தென்? வேதம் அனைத்தும் ஓதியென்? எத்தகையோர்க்கும் இத்தகைய பேரன்பு எய்துமோ?' எனப் பலவாறு வியந்து கூறி, தாம் இதனை யறியாது உரைத்த பழிமொழிகளை எண்ணி

வருந்தி, அச்சமுற்று, வழக்கமேபோல் வைகறையில் எழுந்து, பொன்முகரியில் நீராடி, ஆலயத்தை யடைந்து, அருச்சனை புரிந்து, பெருமான் பக்கலில் மறைந்திருந்தனர்.

வேட்டையாடச் சென்ற திண்ணனார் தம் வழக்கமே போல் இறைச்சி முதலியவற்றைச் சேகரித்துக்கொண்டு விரைந்து வருவாராயினர். வருங்கால், வழியில் பல துர்ச்சகுனங் கண்டு, துணுக்குற்று, 'எம்பெருமானுக்கு இன்று என்னுற்றதோ! என் செய்கேன்!

என்னே ருயிர்க்குத் துணையாவார்
எரிவெம் பசியால் வீழ்த்தாரோ
அன்றேல் கொடிய விலங்கினத்தால்
அச்சுற் றாரோ' எனப் பதைத்து
தன்னே ராவிற் பார்ப்பகுத்தக்
தாழா தோடும் பறவையென
முன்னே மனமும் பின்றாக
முதல்வன் றன்பால் ஓடினர்.

ஓடி, ஆலயத்தை யடைந்து நோக்குதலும், சிவலிங்கப் பெருமான் திருக்கண் ஒன்றில் இரத்தம் வருதல் கண்டு, அடியற்ற நெடும்பனைபோல் தரையில் விழுந்து அரற்றி, 'ஆ கெட்டேன், என்செய்வேன், பாவியேன்' என்று சொல்லிக்கொண்டே எழுந்து, பெருமானைத் தழுவிக் கொண்டு, கண்ணிற் காணும் புண்ணினைப் பல்லால் கையினால் துடைத்தும், இரத்தம் பெருகுதல் கண்டு, துயரங் கொண்டு, 'இதற்கு என்னே சிகிச்சை செய்வது' என்று எண்ணி, தமது கைகளை ஒன்றோடொன்று சூடுபிறக்கத் தேய்த்து, கண்ணில் ஒற்றினர். பின்பு தம் ஆடையைப் பந்துபோல் சுற்றி வாயால் ஊதி, அந்த ஆவியைக் கண்ணில் அப்பினர். அப்பியும், இரத்தம் காணுதல் கண்டு, 'அந்தோ, இனி என்செய்வேன், எவ்வாறு உய்வேன்' எனப் பலவாறு பதைத்து உருகிச் சுற்றிலும் பார்த்து

அங்கிருந்த தும்பை, நந்தியாவட்டம் முதலிய மலர்களைக் கொண்டுவந்து கசக்கிப் பிழிந்தனர். எதனாலும் அது குணப்படாமை கண்டு, 'எந்தாய், உமக்கு இத்தீங்கு இழைத்தவர் யாரோ? எனது இனத்தவராகிய வேடுவரே விரோதங்கொண்டு செய்தனரோ? அன்றி, இவ்வனத்தில் திரிகின்ற விலங்கினங்கள் கொம்பினாற் குத்திக்கொடுமை இழைத்தனவோ? இத்தீங்கை இழைத்தார் என் கண்ணிற் படுவாராயின், இன்னே அவர்களைக் கொல்வேன்' எனத் தம் வில்லைக் கையிற் கொண்டு வெளிப்போந்து, சுற்றித் திரிந்தனர். ஒருவரும் கண்ணிற் படாமையால் திரும்பி ஆலயத்திற் புகுந்து, பெருமான் கண்ணில் பின்னும் குருதி காலுதல் கண்டு, தம் இருகரங்களாலும் முகத்தில் அறைந்து, மார்பிடமெல்லாம் வீங்கப் புடைத்துத், தம் தலையை அண்டியிருந்ததோர் சிலையில் மோதினார். பின்னும்,

ஓடுவன் மீள்வன் வீழ்வன் உருள்குவன் எழுந்து விம்ம
நீடுவன் அந்தோ என்பன் நெட்டுயிர்ப் பெறிவன் நெஞ்சம்
வாடுவன் பொங்கிப் பொங்கி வாய்விட்டு முகத்தைக் கையால்
மூடுவன் அழுவன் கைகள் மோதுவன் கற்க ளோடே.

மலையிடை யெனக்கு வாய்த்த மரகத மணியே செம்பொன்
இலகொளிக் குன்றே யெந்தாய் எம்பிரான் நின்கண் புண்ணீர்
கலுழ்தரற் கென்னை கொல்லோ காரணம் திருவாய் சற்றும்
மலர்கிலை யென்னொ டென்றான் ஆவிசோர்ந் தருகு சென்றான்.

சென்று, குருதி காலும் இடத்தினைக் குறிப்புறநோக்கி, 'இனி இதற்கு என் செய்வேன்' என நீடு நினைந்து, 'ஊனுக்கு ஊனிடலே உசிதமாகும்' எனத் தேர்ந்து, தம் கண்களில் ஒன்றை வில்லினால் இடந்து, பெருமானது கண்ணில் வைத்து அப்புதலும், இரத்தம் ஒழுகுதல் நிற்க, அக்கண் ஒளி பெற்று விளங்குதல் கண்டார், காண்டலும் பெருமகிழ்வுகொண்டு, தோள்களைத் தட்டி,

'ஓடினான் திசைகளெல்லாம் உடம்பெலாங் குலுங்கநக்கான்
பாடினான் வாயில் வந்த படியெலாம் கைகள் கொட்டி
ஆடினான் துள்ளித் துள்ளி ஆரவா ரித்தான் இன்று
நாடிநான் செய்த செய்கை நன்றுநன் றெனா வியந்தான்.'

இவ்வாறு செய்து பேரானந்தங்கொண்டு, பெருமானைக் கட்டியணைத்து, முத்தமிட்டு நிற்கும்போது, திண்ணனு-டைய பேரன்பைச் சிவகோசரியாருக்குக் காட்ட எண்ணி, பெருமான் தம் இடக்கண்ணிலும் இரத்தம் சொரியச் செய்தனர். அதுகண்ட திண்ணனார் தம் உவகையினைத் துறந்து, துயர்க்கடலுள் மூழ்கி மயங்கி, அறிவால் தேறி, 'யான் இனி இதற்கஞ்சேன், மருந்து கைமேற் கண்டேன் இக்கோலை நொடிப்பொழுதில் நீக்குவேன்' எனக் கூறி, தமது இடக்கண்ணையும் அம்பினால் இடந்து அப்பத் துணிந்தனர். தமது கண்ணைப் பிடுங்கியபின் பெருமானது கண் இருக்குமிடத்தைக் கண்டுகொள்ள, தமது செருப்புக் காலைத் தூக்கி அக்கண்ணுக்கு அருகில் ஊன்றிக் கொண்டு, அம்பைக் கையிலெடுத்துக் கண்ணைத் தோண்டி வாரலாயினர். கருணையங் கடலாகிய பரமசிவனார், அச்செய்கைக்கு மனம் பொறாது, தமது அருமைத் திருவாய் மலர்ந்து,

'நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என்
அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப என்று
இன்னுரை பகர்ந்தெம் பெருந்தகை யிங்குத்
தன்னிடைப் பிறந்த தடமலர்க் கையால்
அன்னவன் தன்கை பற்றிய பொழுது
அருளினன் அருளலும்
விண்மிசை வானவர்
மலர்மழை பொழிந்தனர் விண்ணொலி பரவின
துந்துபி முழங்கின தோன்றினர் முனிவரும்
எழுந்தன இன்னிசை வல்லே
சிவகதி பெற்றனன் திருக்கண்ணப்பனே.'

பெறலரும் இப்பேற்றைக் கண்குளிரக் கண்ட சிவகோசரியார் பெருமானையும் பேரன்பினையும் பணிந்து அமைந்து அன்பினை வியந்து தொழுதுகொண்டே சென்றனர். ஆறுநாட்களில் அரும்பெறற் செல்வத்தை இனிதினடைந்த அன்பராகிய திண்ணப்பர் கண்ணப்பர் என்னும் பெயர் பெற்று விளங்குவாராயினர்.

# கண்ணப்பர் கண்ணெபித்தியப் செய்தமை

கையோடு கையினைக் கனவிலுந் தொடுக்கவே
கண்களில் ஒத்தினன் பாவமில்லை
மெய்ம்மை யிருந்ததன் உடைமையினைச் சுற்றியே
பொய்யுற ஆதியவ் விழியினைத் தித்
தூய்மைதா நந்தியும் தூய்மையும் களங்கமும்
சேர்விலான் தேடியே நாகரிகமல்
ஐயமுறுங் காரத்தி யார்க்குங் கண்ணிலே
அப்பியுங் காணுதல் அமைவ தில்லை

கண்டு மனநொந்து நெருக்குழுந்து
காய மெல்லாம் வேர்வை காணநின்று
அண்டி போனவிறுல் அறிவழிந்து
அசைவற்று நின்றேதான் அறிகிலானே.